<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.173/2024</u>

**<u>நாள் : 26.03.2026</u>**

**(மனுதாரரின் மார்பக பகுதிக்கு கீழ் உள்ள பகுதி செயல்பாடு இழந்த நிலையில் உதவியாளர் இளங்கோ என்பவரது உதவியுடன் சக்கர நாற்காலியில் ஆஜர்படுத்தப்பட்டு விசாரணையானது பதிவு செய்யப்படுகிறது)**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வகுமார் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.பாலு | வயது | : | 39 |
| ஊர் | | இரகுபதியூர் | தொழில் | : | |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. விபத்து பதிவேடு நகல் – ம.சா.ஆ.2

3. வேலூர் சிஎம்சி மருத்துவமனை முதுகெலும்பு அறுவை சிகிச்சை பிரிவில் வழங்கிய டிச்சார்ஜ் சம்மரி நகல் – ம.சா.ஆ.3

4.வேலூர் சிஎம்சி மருத்துவமனை உடல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பிரிவு –1 ல் சிகிச்சை பிரிவில் வழங்கிய டிச்சார்ஜ் சம்மரி நகல் – ம.சா.ஆ.4

5.  காயச்சான்று நகல் –  ம.சா.ஆ.5

6. மருத்துவ பில்கள் அசல் (ரூ.7,16,783/–)  – ம.சா.ஆ.6

7.  மருத்துவ பில்கள் அசல் (ரூ.2,35,465/–)   – ம.சா.ஆ.7

8.  மருத்துவ பில்கள் அசல் (ரூ.6,573/–)   – ம.சா.ஆ.8

9. விபத்து ஏற்படுத்திய மேக்சி கேப் வாகனத்தின் காப்பீட்டு  நகல்–ம.சா.ஆ.9

10. விபத்து ஏற்படுத்திய மேக்சி கேப் வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல்– ம.சா.ஆ.10

11. விபத்து ஏற்படுத்திய மேக்சி கேப் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல்– ம.சா.ஆ.11

12. விபத்து ஏற்படுத்திய மேக்சி கேப் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் – ம.சா.ஆ.12

13.மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.13

14. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.14

15.  மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.15

**மருத்துவ குழு அறிக்கை நீ.ம.சா.ஆ.1**
மனுப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**விபத்து சமயத்தில் நான் சென்னையில் சித்தாடப்பாக்கம் பகுதியில் டைல்ஸ் காண்ட்ராக்ட் எடுத்து தொழில் செய்து வந்தேன். அதற்கு அத்தாட்சியாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாதம் ரூ.50,000/- சம்பாதித்ததை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வருமானத்தை காட்டும் வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அதிகப்படியான நஷ்டஈடு பெறும் நோக்கில் எனது தொழில் குறித்து தவறுதலான விவரங்களை தெரிவித்துள்ளேன் என்றால்**

சரியல்ல. விபத்து சமயத்தில் TN 23 BX 8955 என்ற பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஹெல்மெட் அணியாததால்தான் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் விபத்து சமயத்தில் நான் ஹெல்மெட் அணிந்திருந்தேன். அவ்வாறு ஹெல்மெட் அணிந்திருந்ததால்தான் தலையில் குறைவான காயம் ஏற்பட்டதாக கூறுகிறார். 05.07.2024அன்று மாலை 6.00 மணிக்கு வழுதலம்பட்டுவிலிருந்து புதூர் நாடு நோக்கி போகும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த ரோடு ஒருவழிச்சாலை என்றால் சரிதான். அப்போது எதிர்புறத்தில் TN 15 MB 1396 என்ற மேக்சி கேப் வந்தது என்றால் சரிதான். அவ்வாறு மேக்சி கேப் வந்தநிலையில் நான் சாலையின் ஓரமாக சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் இடதுபுறமாகத்தான் போனேன். ஆனால் எதிர்புறத்தில் வந்த வண்டிதான் பாட்டு போட்டுக்கொண்டு அதிவேகமாக வந்து என்மீது மோதிவிட்டது என்று சாட்சி கூறுகிறார். நானும் அதிவேகமாக சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழியாக நான் மாமுலாக கோவிலுக்கு போய் வரும் வழியாகும். நான் மெதுவாகத்தான் வந்தேன். எனது வாகனம் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. (அது ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது) மேற்படி ஓட்டுநர் உரிமத்தை மோட்டார் வாகன ஆய்வின்போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் காவல் நிலையத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த வழி ஒருவழிப்பாதை என்பதால் மெதுவாகத்தான் போனேன். நான் அதிகப்படியான நஷ்டஈடு பெறும் நோக்கில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின்கிழ் கோரியுள்ள தொகை

மிகைப்படியானது என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது வாகனத்தில காப்பீடு செய்யாமல் பயணம் செய்ததால் என்னுடைய தற்சார்பு கவனமின்மையும் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.